முருகப்பெருமான் துணை

**மகான் கோட்புலி நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.07.2022, செவ்வாய்கிழமை

1. சற்குருவாய் ஞானம் அருளுகின்ற
சடாட்சர பலமிக்க அரங்கனே
அற்புதமிக்க உன் சன்மார்க்கமே
அகிலத்தை மாற்றும் எனக் கூறி
2. கூறியே சுபகிருது நள்ளி திங்கள்
குறைவிலா சூலதிகதி குசன்வாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 03 நாள், 19.07.2022 செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு கோட்புலி நாயனார் யானும்
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான அரங்கன் வழிகாட்டலே
ஞானமாக உலகினில் வலம்வர
நம்பிக்கை வைத்து உலகமக்கள் வர
4. வருகவே மக்களிடை மனபலமும்
வள்ளல் தன்மைபட வாழும் ஆற்றலும்
தர்ம சிந்தையும் தயவே வடிவாகவும்
தரணியோர் மாற்றம் கண்டடைவர்
5. அடையவே ஆத்ம பலமோடு
ஆறுமுகனை வணங்கும் அறிவும் தெளிவும்
தடையில்லா சித்தியும் காண்பர்
தவசி அரங்கனே கலியிடரை நீக்கும்
6. நீக்கும் மகா குரு எனும் சூட்சுமம்
நிலமதனில் விளங்கி இனிதே
தேக்கமின்றி அரங்கன் வழி
தொடர்ந்து வந்து உலகமக்கள்
7. மக்களெல்லாம் ஞானிகளாகவே
மாற்றமும் தேற்றமும் பெறுவர்
ஆக்கமுடன் பிரணவக்குடில் நோக்கி
அனைவரும் வருகை புரிந்து
8. புரிந்துமே அரங்க மகானின்
புண்ணிய வழிகளை பின்பற்றி
அருந்தவசி அருளுபதேசங்களை
ஆற்றல் மிக்க வேதமாக ஏற்று
9. ஏற்றுமே ஞானம்தனை பயின்று
எந்நாளும் ஆறுமுகனார் பேரில்
பற்றுவைத்து செபதபம் செய்து
பணிந்து மாதருமமும் செய்துவர

10. வருகவே உலகம் எங்கிலும்
வளர்ந்து அரங்கன் தருமம்
தருமலோகம் ஆக மாற்றியே
தரணியில் இயற்கை வளமுடன்

11. வளமுடன் தேட்டு விருத்திகளும்
வளர்ச்சி தரும் ஆளுமையும்
பலமுடன் ஞான ஆட்சியாக மாறும்
பாடிவந்த அருளாசி முற்றே

–சுபம்–